**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**அ.வ.எண்.258/2019**

**03.08.2026**

**(வா.சா.1) திரு . மகாலெட்சுமி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (4, 8பிரதிவாதிகள் தரப்பில்)**

1. எனக்கு திருமணம் 1994–ஆம் ஆண்டு நடைபெற்றது. எனது திருமணத்திற்கு முன்பே எனது தகப்பனார் இறந்துவிட்டார். எனது தகப்பனார் சுப்பிரமணிய கவுண்டர் கடந்த 37 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது தகப்பனார் இறந்தபிறகு நானும், 1, 2 பிரதிவாதிகளும் தாயார் சுந்தரம்மாளும் ஒரே குடும்பமாக வசித்து வந்தோம். 1–ஆம் பிரதிவாதிக்கு திருமணம் எதுவும் நடக்கவில்லை. எனக்கு எனது தாயார் திருமணம் செய்து வைத்தார். 2–ஆம் பிரதிவாதி அவரது விருப்பப்படி சுமார் 27 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டு, குடும்பத்தை விட்டு தனியாக சென்றுவிட்டார். 2–ஆம் பிரதிவாதி திருமணம் செய்தபிறகு, தற்போதுவரை சொத்துக்களுக்கு உரிமையோ அனுபவமோ கோரி வரவில்லை என்றால் சரிதான். எனது திருமணத்தின்போது எனக்கு எவ்வித நகையோ, சீர்வரிசை எதுவும் செய்யவில்லை. 1–ஆம் பிரதிவாதியுடன் நான் நல்ல உறவில்தான் இருந்து வருகிறேன். செந்தில்குமாருடன் ஒப்பந்தம் செய்த பின்னர்தான் அவருடன் சரியான உறவு இல்லை. அதற்கு முன்னர் நடந்த சங்கதிகள் எனக்கு தெரியாது. எனது தாயார் இறந்தபிறகு 1–ஆம் பிரதிவாதி என்னுடன்தான் வசித்து வருகிறார். நான் எனது திருமணத்திற்கு பிறகு எனது கணவர் வீட்டான ராமபட்டிணம்புதுாரில்தான் வசித்து வருகிறேன். எனது கணவர் வீட்டில் விவசாய நிலம் உள்ளது. எனக்கு திருமணம் முடிந்ததில் இருந்து, எனது கணவர் வீட்டு நிலத்தில்தான் விவசாயம் செய்து ஜீவனம் செய்து வருகிறேன். 1–ஆம் பிரதிவாதியும், என்னுடைய தாயாரும் வழக்கு சொத்துக்களை விவசாயம் செய்தும், வில்லங்கம் செய்தும் வந்தார்கள் என்றால்

**நானும்தான் வழக்குச் சொத்துக்களில் விவசாயம் செய்து வந்தேன். வழக்குச் சொத்துக்களுக்கான வரி 1–ஆம் பிரதிவாதிதான் செலுத்தினார் என்றால் விவசாயம் செய்து வந்தார்கள். விவசாயம் செய்வதற்கு என்னிடம் செலவுக்கு பணம் கேட்பார்கள், அவ்வப்போது நானும் கொடுத்தேன்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

RAJA B

Digitally signed by RAJA B
Date: 2026.08.03 05:58:49 +0530